RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் பேசும் பெண்ணியம்

**செ. கனிமொழி [அ], ர. கௌரி [அ, *]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-32, தமிழ்நாடு, இந்தியா

# Feminism as expressed by Rajam Krishnan

**S. Kanimozhi [a, *], R. Gowri [a, *]**

[a] PG Tamil & Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamilnadu, India

* Corresponding Author: gowrigayathri15@gmail.com

Received: 03-12-2025
Revised: 23-02-2026
Accepted: 07-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan's feminist thoughts expressed in his works are reflected through his novels. Both men and women are equal in the birth of a rational human being. The importance of women's education for society is also emphasized. Women are not able to pursue higher education due to their economic and financial status. The inability to pursue higher education is also mentioned. This article explores feminist ideas such as men needing to understand and act on women's feelings.

**Keywords:** Women's education in the Sangam period, Economic status of women's education, Patriarchy, female slavery, Sangam marriage system

## முன்னுரை

பல வகைப்பட்ட மக்களை கொண்ட பெரியச் சமுதாயமாகப் பாரததேசம் விளங்குகின்றது. இலக்கிய ஆசிரியர்கள், சிந்தனையாளர்கள் தத்தம் வழியிலே தாம் கொண்டிருக்கும் கொள்கை மற்றும் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்வது அவர்களது கடமையாகிறது. மனிதப் பிறவியில் ஆண் பெண் இருவரும் சமமே. பெண் தாழ்ந்தவள் ஆண் உயர்ந்தவன் என்ற நிலையே பெண்ணை அடிமையாக்கி இல்லற சிறைக்குள் பெண்ணை அடைத்து வைத்தனர். ஒரு காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தலைமை பண்பு வாய்ந்தவளாக விளங்கினாள். இந்நிலை காலப்போக்கில் மாறி ஆணாதிக்கம் மேலோங்கிய போது, பெண் அடக்கப்பட்டதன் விளைவே பெண்ணியம் செயல்படத் தொடங்கியது. ஆண்களுக்கு நிகரான உரிமை தங்களுக்கும் வேண்டும் என்று பெண்கள் போராடத் தொடங்கினர். பெண்கள் உடலாலும் உள்ளத்தாலும் வலிமை படைத்தவர்கள். பெண்ணுக்குரிய இயற்கை சூழலைக் காரணம் காட்டி பெண்களை அடிமைப்படுத்தினர். இதனை களைய வேண்டும் என்று சிந்தித்து பெண்களுக்குரிய விடுதலை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் பெண் இயக்கங்களும், பெண்ணியலாளரும் பெண்ணியக் கோட்பாடுகளை முகிழ்ந்தனர். இராஜம் கிருஷ்ணன் பெண்ணியவாதியாக திகழ்ந்தவர். தன்னுடைய எழுத்துக்களால் பெண்மையின் மேன்மையை எடுத்துரைத்தவர். இராஜம் கிருஷ்ணன் அவர்களது புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலைப்பாடுகள் இவ்வாய்வில் ஆராயப்படுகிறது.

## கல்வி

சமுதாய எதிர்ப்பு, நிதிநிலைமை, கல்விக்கூடம் அமைந்துள்ள இடங்கள் ஆகியவையே பெண் கல்விக்கு தடையாக அமைந்தன. நகர்ப்புறங்களில் உள்ள பெண்கள் கல்வி கற்பதன் இன்றியமையையும், கல்வியின் சிறப்பையும், உணர்ந்த பெண்கள் சமுதாய முன்னேற்றத்திற்கும், தங்களுக்கும் கல்வி தேவை என்பதை நினைவில் நிறுத்தினர்.

கல்வி, கலை, பண்பாடு போன்றவற்றில் நம் தமிழ் சமுதாயம் சிறப்பிடம் பெற்று விளங்கியதை,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிச்சை நிலை முனியாது கற்றல் நன்றே",(1)

என்று புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது. தமிழ் சமுதாயத்தில் சங்ககாலத்தில் பெண் கல்வி உயர்ந்திருந்ததற்கு சான்றாக விளங்கியவர்கள், அவ்வையார், பொன்முடியார், காக்கைபாடினார், முடத்தாமக்கண்ணியார், ஆதிமந்தியர், வெள்ளிவீதியார் ஆகியோர் பெண் கல்வியையும், கலைகளையும் கற்றுக் வளர்த்த பெண்களாவர். இடையில் தமிழ் சமுதாயத்தில் ஆணாதிக்கம் மேலோங்கிய போது பெண்கல்வி பின்தங்கிவிட்டது. அவ்வாறு பின்தங்கிய பெண் கல்வியை மேம்படுத்த பாரதியார், பாரதிதாசன், ஈ.வே.ரா. பெரியார் போன்ற ஆன்றோரும், சான்றோரும் பாடுபட்டனர். கல்வி கற்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானதாகும். ஆணும், பெண்ணும் சமத்துவமாக வாழ்வதற்கும், பெண்களுக்கு அழகு செய்யும் அணிகலனாகவும், கல்வி விளங்குகிறது. இதனை,

"கற்றோருக்கு கல்வி நலனை கலனல்லால்

மற்றோர் அணிகலன் வேண்டாவாம்",(2)

என்று நீதிநெறி விளக்கம் தருகின்றது.

கல்வியறிவு பெற்ற பெண்களால்தான் சிறந்த சமுதாயத்தையும், குடும்பத்தையும் உருவாக்க இயலும் என்பதை உணர்ந்த இராஜன் கிருஷ்ணன் 'சேற்றில் மனிதர்கள்' என்ற புதினத்தின் வாயிலாக அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரம் சிறக்க பெண்கல்வியின் அவசியத்தை கூறியுள்ளார். பள்ளிப் படிப்பை முடித்த காந்திமதி உயர்கல்வி படிக்க விரும்புகிறாள். அவளின் தந்தை சண்முகமும் சம்மதிக்கிறார். தொழிற்கல்வி படிக்க வேண்டும் என்ற ஆசை கொண்டு, அதன் நன்மைகளை தெரிந்து கொண்டு, படிக்க முற்படுகிறாள் காந்திமதி. அச்சமயத்தில் பொருளாதாரப் பற்றாக்குறை காரணத்தால் மகன் மற்றும் மகள் இருவரில் மகனை முதலில் படிக்க வைக்கிறார் தந்தை சண்முகம். ஓராண்டு கழித்து மகள் காந்திமதியை தொழிற்கல்விச் சேர்க்க நினைக்கின்றார். கல்வி நிறுவனத்தில் தன்மகளைச் சேர்க்க நிறுவனத்தார் நன்கொடை கேட்க,

"இவ மதிப்பெண் மற்ற தகுதியெல்லாம் திருப்தியாகவே இருக்கு. உங்க மகளுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. அதனால் சண்முகம், நீங்க ஓர் இரண்டாயிரம் முதலில் கட்டிடணும், "உங்க மகளில்ல செலக்சன் ஆகும் மாணவியர் யாராக இருந்தாலும் டொனேஷன் கட்டணும் என்று விதி",(3)

என்று தொழிற்கல்வி நிறுவனத்தார் வளவன் கூறிய உடன், சண்முகம் மகளின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் கவலை கொள்கிறார்.

உயர்கல்வி பெற பொருளாதார ஒரு தடையாக இருப்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

எப்பிறவியில் பிறந்தாலும், கல்வி ஒருவரை உயர்வடையச் செய்யும், கல்வியறிவால் வறுமைகள் நீங்கமுடியும் என்பதை புரிந்து கொண்ட இராஜன் கிருஷ்ணன் 'வேருக்கு நீர்' புதினத்தின் வாயிலாக யமுனா என்ற கதைமாந்தரின் வழி கல்வி வேண்டும் என்ற விழிப்புணர்வை விளக்கிச் செல்கின்றார்.

"நீங்கள் எல்லாம் ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை? (4) என்று யமுனா சிறுவர்களை கேட்க, பள்ளிக்கூடமா... ஆமா ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை? (5) என்று யமுனா கேட்டவுடன் வண்ணாத்தி, "இந்தப் பிள்ளை யைப் பள்ளிகளுக்கு அனுப்பினால் இவர்களுக்கு கீழ் உள்ள குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வார்கள்"(6) என்கின்றாள். இது போன்ற பெற்றோர்களால் பெண்குழந்தையின் கல்வி பாதிக்கப்படுவதை உணர்ந்த யமுனா குழந்தைகளுக்கு கல்வியைக் கற்றுக் கொடுக்க முடிவு செய்கிறாள். தனது வீட்டின் ஒரு பகுதியை ஒதுக்கி குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதை தனது கடமையாக நினைத்து செய்து வருகிறாள்.

கல்வி உடைய பெண்கள் "திருந்திய கழனி; அங்கே நல்லறிவுடைய மக்கள் விவைவது நவிலவோ நான்!"(7) என்று பாரதிதாசன் குறிப்பிட்டதைப் போல் யமுனா தான் பெற்ற உயர் கல்வியை தன் அறிவைக் கொண்டு வறுமையின் பிடியில் இருக்கும் குழந்தைகளின் கல்விக் கண்ணை திறக்கிறாள்.

பெண் கல்வி மூலம், சமுதாயத்தில் அறியாமை இருளை நீக்கி ஒளியை ஏற்ற முடியும் என்பதை ஆசிரியர் இராஜம் கிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## திருமணம்

சங்க காலத்தில் மகளிர் தாம் விரும்பிய ஆடவரைத் திருமணம் செய்து கொள்ளும் உரிமை பெற்றிருந்தார்கள் அதனை உடன்போக்கு திருமணம் என்றனர். சங்ககாலத்தில் இருந்த திருமண உரிமை குறித்து இராஜன் கிருஷ்ணனின் புதினங்களில் வெளிப்படுகிறது. 'கரிப்பு மணிகள்' என்ற புதினத்தில் பொன்னாச்சி, இராமசாமியை தான் விரும்பி மணந்து கொள்கிறாள்.

இல்லற வாழ்வின் அடிப்படையாக அமைவது திருமணம். இத்திருமணத்தில் ஆண்வீட்டாருக்கும், ஆணுக்கும், பெண் பிடித்திருந்தால் பெண் வீட்டில் திருமணம் செய்து வைக்கின்றனர். பெண்ணோ பிடித்தும், பிடிக்காமல் திருமணத்தில் உடன்படுகிறாள். பெற்றோர் மற்றும் ஆணின் விருப்பத்தை முன்னிறுத்தி நடத்தப்படும் திருமணத்தைக் கண்டு பாரதியார்,

"வற்புறுத்தி பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்

வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"(8)

கூறுகின்றார்.

திருமணம் என்பது இருமனம் இணைவது. திருமணம் என்னும் பந்தத்தில் இச்சமுதாயம் அவளை அடிமைப்படுத்தியதை 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' என்ற புதினத்தில் வழியாக ஆசிரியர் இராஜம் கிருஷ்ணன்,

"ஒன்பதாவதுக்கு மேல் எட்டிப் பார்க்க முடியாத ஒரு அதிர்ஷ்டம் கெட்ட பெண்... பதிமூன்று வயசுக்குள் எட்டு முடித்து ஒன்பதுக்கு வந்து என்ன பயன்? குடும்ப மானத்தைக்

காப்பாற்ற மல்லிநாதன் என்ற ஒரு பத்தொன்பது வயசுக்காரனுக்கு அடிமையாக வேண்டி இருந்தது"(9) என்ற தனது எண்ணத்தை முன் வைத்துள்ளார்.

## முடிவுரை

பெண்களை சித்தரிப்பதில் சிறந்த விளங்குபவர் இராஜன் கிருஷ்ணன். ஆண் சமுதாயம் பெண்ணை போகப் பொருளாக பார்க்காமல், அவளும் மனித இனமே என்பதை உணர்ந்து அவளுக்கென்று தனிப்பட்ட அறிவு, ஆற்றல், சிந்தனை, எண்ணம், செயல் ஆகியவை உண்டு என்பதை உணர்ந்தால் நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை ஏற்படும். இல்லையெனில் பண்பாடு, கலாச்சாரம் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும் என்பதை பாரதி முதல் இன்று வரை எழுத்தாளர்கள் பதிவு செய்து வருகின்றனர். நல்லதொரு குடும்பம் அமைய வேண்டுமெனில் பெண்மை மதிக்கப்பட வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்லும் மனபக்குவம் வேண்டும் என்னும் பெண்ணியச் சிந்தனையை புதினங்களின் வாயிலாக இராஜம் கிருஷ்ணன் அறிவுறுத்துகிறார்

## References


புறநானூறு பா.எண்-183

நீதிநெறி விளக்கம், குமரகுருபரர் சுவாமிகள்.பா.எண்-13

இராஜன் கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்கள். ப-23,24

இராஜம் கிருஷ்ணனின் வேருக்கு நீர். ப-180

பாரதிதாசன் குடும்ப விளக்கு- விருந்தோம்பல்.

பாரதியார் கவிதைகள்- பெண்கள் விடுதலைக்கும்மி, ப-477

இராஜம் கிருஷ்ணன், சுழலில் மிதக்கும் தீபங்கள்.ப- 14.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 20xx. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License